மனனம் செய்ய
இந்த வார வசனம்:

நான் நாள்தோறும் கோவிலில் உங்களோடு இருந்தும், நீங்கள் என்னைப் பிடிக்கவில்லையே; ஆனால் இது உங்களுடைய நேரம்; இப்போது இருள் அதிகாரம் செலுத்துகிறது என்றார்

(லூக்கா 22:53)

உரோமையர்கள் மீதிருந்த அச்சம், இயேசுவுக்கு எதிராக சதித்திட்டம் தீட்டிய பரிசேயர்களின் மீதிருந்த அச்சம்; அதிகாரத்தின் மீதிருந்த அச்சம் இவைகள் அனைத்தும் கண்மூடித்தனமாக அப்பாவி மனிதனை சிலுவையில் அறைய மக்களை வழிவகுத்தது. ஒரு கலகத்தின் அச்சம் நியாயத்தோடு நடக்க வேண்டிய கடமையிலிருந்து பிலாத்துவை பின் வாங்கச் செய்தது. மேலும் இந்த அச்சம் தான் பேதுரு இயேசுவை மறுதலிக்கச் செய்தது.

இன்றும் நாம் உலகத்தைக் கண்டும், இருளுக்கும் இழப்புக்கும் அச்சப்படுகின்றோம். பழிவாங்கப் பட்டுவிடுவோமென்று பயந்து சட்டத்தைப் பின்பற்றுகின்றோம். தனிமைப்படுத்தப்பட்டு விடுவோமென்று கூட்டத்தைப் பின்பற்றுகின்றோம். தோல்வி அல்லது வெற்றிக்குப் பயந்து, நம்மை நாமே கட்டுப்படுத்திக் கொள்கின்றோம். கடந்த வாரத்தைத் திரும்பிப் பாருங்கள். உங்களின் எத்தனை முடிவுகள் பயத்தால் எடுக்கப்பட்டன?

ஆனால் நாம் இப்படி வாழவேண்டுமென்று நினைத்ததில்லை. கடவுள் அவருடைய வாழ்விலும் மகிழ்ச்சியிலும் நாம் பங்கு கொள்வதற்காக மனிதகுலத்தைப் படைத்தார். கடவுளின் அருளில் மனிதகுலம் வாழ்ந்தபோது, அங்கு அச்சத்திற்கு இடமோ, காரணமோ இல்லை. பாவமும் அதன் தொடர்ச்சியான விளைவுகளும், நம் வாழ்வில் மரணத்தையும் அச்சத்தையும் கொண்டுவந்தது. கடவுளின் அன்பையும், நேர்மையையும் அளவிடமுடியாது என்பதை அறிந்துள்ளதால், இப்போது நாம் அவருடைய நீதிக்கும் பழிவாங்குதலுக்கும் கூட அச்சப்படலாம்.

நம்மை அன்பு செய்யும் கடவுள் நாம் எப்போதும் அச்சத்தில் வாழவேண்டும் என்று விரும்புவதில்லை. இந்த ஒரே காரணத்தினால் தான் தம்முடைய சொந்த மகனையே அனுப்பி நம் வாழ்வை மீண்டும் நிலைநாட்டினார். இயேசு தம்முடைய நண்பர்களை மிகவும் அன்பு செய்ததால், தம்முடைய உயிரைத் தாமே முன்வந்து கையளித்தார். நாம் அனைவரும் அவரோடு நிலைவாழ்வில் என்றுமிருக்க அவருடைய அச்சத்தையே எதிர்கொண்டு நமக்காக அனைத்தையும் கையளித்தார்.

**பாடுகளின் நிகழ்வுகள் நமக்கு தெரிவிப்பதென்னவென்றால், அன்பு, அச்சம் அனைத்தையும் ஆட்கொண்டுவிடும்.** நம்மை மிகவும் நேர்மையாக அன்புசெய்வதன்வழியக, அச்சத்தின் அனைத்து விலங்கையும் உடைத்து, நம்மை கடவுளின் பிள்ளைகளாகும் சுதந்திரத்தை அளித்தார். "தந்தையே உம் விருப்பபடியே நிகழட்டும்" என்ற சொல்லக்கூடிய துணிவை இயேசுவுக்கு அளித்தது, அன்பு தான்.

எல்லைகளைத் தாண்டி வாழ அன்பே உங்களுக்குத் துணிவைத் தருவதாக. ✣

**இன்றைய வாசகங்கள்:**

இச: 50: 4-7;
திபா: 22: 8-9, 17-20, 23-24;
பிலிப்பியர்: 2: 6-11;
லூக்கா: 22:14-23, 56 (அ) 23: 1-49.

INTERNAL CIRCULATION ONLY
BUL 15/2022

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org



Newbec
NEW WAY OF BEING CHURCH

**ஆண்டவரின் பாடுகளின் குருத்து ஞாயிறு**

**மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்:** ஒன்றிப்பு, பங்கெடுப்பு, மறைத்தூது

மாதாந்திர கருப்பொருள்:

**உலக படைப்பாற்றல் மற்றும் புத்தாக்க தினம் (ஏப்ரல் 21)**

# அன்பு நம்மை சுதந்திரமாக வாழ வைக்கிறது





தனது தந்தையின் ஒவ்வொரு திட்டத்தையும் இயேசு அறிந்திருந்தார். யெருசலேமுக்குள் ஆரவாரமாக வரவேற்ற அதே மக்கள் கூட்டம் பிலாத்து சிலுவை மரணத்திற்கு அனுமதி தராவிட்டால் கலவரம் செய்ய அச்சுறுத்தும் அதே கூட்டமாக மாறும் என்று இயேசு அறிந்திருந்தார். ஒரு மனிதனின் உள்ளம் அச்சத்தால் கடினப்பட்டிருந்தால், அவனால் எதையும் செய்யவோ எதையும் மாற்றவோ இயலாது என்பதையும் அறிந்திருந்தார்.